செ.வெ.எண்-07 நாள்-03.12.2019

# அரியலூர் மாவட்டம்
# 2019-உள்ளாட்சி தேர்தலில் 8313 அலுவலர்கள் வாக்குப்பதிவு பணியில் ஈடுபடவுள்ளனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தகவல்

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உள்ளாட்சி தேர்தல் 2019 அமலுக்குவந்துள்ளதையொட்டி, உள்ளாட்சி தேர்தல் 2019 சம்மந்தமான செய்தியாளர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்** அவர்கள் முன்னிலையில் இன்று (03.12.2019) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் டிசம்பர் மாதம் 27 மற்றும் 30 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறும். வேட்பு மனு தாக்கல் 06.12.2019 முதல் துவங்கும். தேர்தல் நாளன்று வாக்குப்பதிவு காலை 7.00 மணிக்கு துவங்கி மாலை 5.00 மணியுடன் முடிவடையும். வாக்கு எண்ணிக்கை 02.01.2020 அன்று காலை 8.00 மணிக்கு தொடங்கும்.

வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் 13.12.2019, 16.12.2019 அன்று வேட்பு மனுக்களை ஆய்வு செய்தல், 18.12.2019 வேட்பு மனுக்களை திரும்ப பெறுதல், 06.01.2020 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சி தலைவர்களின் முதல் கூட்டம் மற்றும் பதவி ஏற்பு நாள்.

அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட 12 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்களும், 6 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 113 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களும், 201 கிராம ஊராட்சித் தலைவர் பதவியிடங்களும் மற்றும் 1662 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களும் அடங்கும்.

அரியலூர் மாவட்டத்தில் 1017 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

அரியலூர் மாவட்டத்திலுள்ள ஊரக பகுதிகளில் 2 இலட்சத்து 68 ஆயிரத்து 379 ஆண் வாக்காளர்களும், 2 இலட்சத்து 68 ஆயிரத்து 590 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலின வாக்காளர்களும் ஆக மொத்தம் 5 இலட்சத்து 36 ஆயிரத்து 976 வாக்காளர்கள் உள்ளனர்.

ஊராட்சி தேர்தலுக்காக 14 தேர்தல் நடத்தும் அலுவலர்களும், 269 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஊராட்சி தேர்தலுக்காக ஒரு வாக்குச்சாவடிக்கு 7 அல்லது 8 அலுவலர்கள் வீதம் சுமார் 8313 அலுவலர்கள் வாக்குப்பதிவு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

மக்கள் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் வாக்களிக்க ஏதுவாகவும், வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப்பதிவு பொருட்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லவும், அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெறுவதை உறுதி செய்திடவும் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாதாரண நேரடித் தேர்தல் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளைக் கொண்டு 1 மாவட்ட ஊராட்சித்தலைவர் பதவியிடமும், 1 மாவட்ட ஊராட்சித்துணை தலைவர் பதவியிடமும், 6 ஊராட்சி ஒன்றியத்தலைவர் பதவியிடமும், 6 ஊராட்சி ஒன்றியத்துணைத் தலைவர் பதவியிடமும், 201 கிராம ஊராட்சி துணைத் தலைவர் பதவியிடமும் மறைமுகத்தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும்

தேர்தல் நடத்தை விதிகள் மாவட்ட முழுவதும் உள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட அனைத்து ஊரக உள்ளாட்சி பகுதிகளிலும் உடனடியாக அமலுக்கு வருகின்றது. அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் தேர்தல் நடத்தை விதிகளை கடைபிடித்து, தேர்தல் அமைதியாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெற எல்லா விதத்திலும் மாவட்ட தேர்தல் நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், அரியலூர் கோட்டாட்சியர் (பொ) ஜெ.பாலாஜி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் ரகு (உள்ளாட்சி தேர்தல்), இரவிச்சந்திரன் (பொ) மற்றும் அலுவலர்கள், செய்தியாளர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**